"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,141,99,55,000/–, மூலதனக் கணக்கில் ரூ.321,18,40,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.150,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 26–8–2015 (புதன்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

42. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகளை இயற்றியது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந-5) துறையின் 21–2–2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 10–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/2014) 25(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2015 ஆகஸ்ட் 25

43. விரைவுப்படுத்தப்பட்ட நீர்ப்பாசன பயனடைதல் திட்டத்தின் நிதி உதவியுடன் ரூ.2,000 கோடி செலவில் காவிரிப் படுகையில் மேற்கொள்ளப்படவுள்ள கல்லணைக் கால்வாய் திட்ட மேம்பாடு மற்றும் புனரமைப்புப் பணியின் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு தொடர்பாக திருவாளர்கள் வாட்டர் மற்றும் பவர் கன்சல்டன்சி சர்வீஸஸ் (WAPCOS) லிமிடெட்டின் சேவையினைப் பயன்படுத்துதல் குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16 (f)–ன்கீழ், நிதித் (சம்பளங்கள்) துறையின் 27–2–2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 54–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

44. துறைப் பண்ணைகளில் உள்ள கால்நடைகளுக்கான தீவனத்தினை தமிழ்நாடு கால்நடை மற்றும் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கியது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16 (f)–ன்கீழ், நிதித் (சம்பளங்கள்) துறையின் 3–3–2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 58–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

45. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்) மற்றும் தமிழ்நாடு கால்நடை மற்றும் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திடமிருந்து தமிழ்நாட்டில் உள்ள கால்நடைகளுக்கான தாதுக்கலவையினைக் கொள்முதல் செய்வதற்கு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கியது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16 (f)–ன்கீழ், நிதித் (சம்பளங்கள்) துறையின் 4–3–2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 59–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

46. மேகக் கணினியம்மூலம் மையப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் மேலாண்மை முறைமை மற்றும் இணையக் குத்தகை வழித் தொடர்பினை தலைமைத் தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பதிவு அதிகாரிகள் ஆகியோரின் அலுவலகங்களுக்கு வழங்குதல் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளின் அலுவலகங்களுக்கு அகண்ட அலைவரிசைத் தொடர்பு வழங்குதல் குறித்த பணிகளை திருவாளர்கள் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (BSNL) நிறுவனத்தாரிடம் ஒப்படைக்கப்படுவது குறித்தும் மென்பொருள் உரிமங்களை வழங்குவதற்கான ஆணையினை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் (ELCOT) ஒப்படைக்கப்படுவது குறித்தும் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16 (f)—ன்கீழ், நிதித் (சம்பளங்கள்) துறையின் 2–6–2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 160—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

47. 2015—ன் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கான முக்கிய நிகழ்வினை அமைப்பதற்கு நிகழ்ச்சி பங்குதாரராக இந்திய தொழில் கூட்டமைப்பை (CII) தெரிவு செய்தது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 16 (f)—ன்கீழ், நிதித் (சம்பளங்கள்) துறையின் 8–6–2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 167—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

48. காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கத்தில் 28–6–2014 அன்று பன்மாடிக் கட்டடம் இடிந்து விழுவதற்கு வழிவகுத்த சந்தர்ப்ப சூழ்நிலைகள், காரணங்கள் மற்றும் அனைத்து அம்சங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் திரு. ஆர். ரெகுபதி விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)